<u>நெல்லிக்குப்பம் நகராட்சி</u>
<u>நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்</u>

2021–ம் ஆண்டு மே மாதம் 24ம் தேதி (24.05.2021) திங்கட்கிழமை முற்பகல் 12.00 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் சாதாரண கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. எஸ் . பார்த்தசாரதி
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி

**<u>மன்றபொருள் .1.</u>** தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் –2021 வருகின்ற 06.04.2021ல் நடைபெறுவதாக தலைமை தேர்தல் அலுவலர் கால அட்டவணை வெளியிட்டதன் காரணமாக மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர் அவர்கள் தலைமையில் 27.02.2021ல் நடைபெற்ற சட்டமன்ற தேர்தல் சம்மந்தமான கூட்டத்தில், நகர் பகுதியில் பொது மற்றும் தனியார் அவர்களில் எழுதப்பட்டிருக்கும் கட்சி விளம்பரங்கள் மற்றும் சின்னங்களை உடனடியாக அழித்திட வேண்டும் என அறிவுறுத்தியதில், தேர்தல் அவசர அவசியத்தினை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் விளம்பரங்கள் அழிப்பதற்கு உரிய பெயிண்ட் வகைகள் மற்றும் பிரஷ்கள் வாங்கி வழங்கிட அனுமதியும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.10,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:
1. மன்றம் அனுமதிக்கலாம்
2. தேர்தல் கால அவசர பணியாக இருப்பதினால் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டதற்கும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.2966/2020/எப்1**
**தீர்மான எண் . 53. அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள் .2.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான ஆடு அறுக்கும் இடத்திற்கு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் வழங்கப்பட்ட ஒப்புதல் காலம் 31.03.2021வுடன் முடிவடைவதால் ஒப்புதல் காலத்தை 2021–2022 ம் ஆண்டிற்கு புதுப்பிக்கப்பட வேண்டும். 2021–2022ம் ஆண்டு புதுப்பிக்க வேண்டி தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் கடிதம் எண்.F.CUD0450/RS/DEE/TNPCB/CUD/2021 நாள் 11.03.2021ன்படி ரூ.8800/– நிர்ணயம் செய்யப்பட்டு தொகை செலுத்தக்கோரி கடிதம் வரப்பெற்றுள்ளது. அதன் அடிப்படையில் தொகை ரூ.8800/– மட்டும் தமிழ் நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், கடலூர், மாவட்ட பொறியாளர் அவர்களுக்கு செலுத்திடவும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு:**
1. மன்றம் அனுமதிக்கலாம்
2. தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை எடுக்கலாம்.

**(ந.க.எண் 3203/2013/எச்1)**
**தீர்மான எண் . 54. அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.3.</u>** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–28 அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 7936/ஜே2/2020–3, நாள்.10.03.2021ல் உள்ளாட்சி அமைப்புகளில் கொரோனா தொற்று நோய் பரவாமல் தடுத்திடவும், கட்டுப்படுத்திடவும் உரிய வழிமுறைகளை கடை பிடித்திடுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 06.04.2021ல் சட்டமன்ற பொது தேர்தல் நடைபெற உள்ளதினால், அனைத்து வார்டு பகுதிகளிலும், வாக்குச்சாவடி மையங்களிலும் கிருமிநாசினி தெளிக்கப்பட வேண்டி உள்ளது.

எனவே கொரோனா தொற்றுநோய் பரவாமல் தடுத்திடும் பொருட்டும், தேர்தல் சமயத்தில் கிருமிநாசினிகள் தெளிக்கப்பட வேண்டி உள்ளதினாலும்

1. பிளிச்சீங் பவுடர் – 3000கிலோகிராம்
2. நீர்த்த சுண்ணாம்பு – 7000கிலோகிராம்
3. முக கவசம்(ஒருமுறை பயன்படுத்துதல்) – 10,000 எண்ணிக்கைகள்
4. கையுறை (காட்டன்) – 500 எண்ணிக்கைகள்
5. கையுறை (ரப்பர்) – 200 எண்ணிக்கைகள்

ஆகியவை பொது சுகாதாரம் மற்றும் கொரோனா தொற்று நோய் பரவாமல் தடுத்திடும் விதமாக தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம்–1920, பிரிவு–15ன் கீழ் அவசர அவசியத்தினை கருதி திருப்பத்தூர் அக்ரோ என்ஜினியரிங் அண்ட் கூட்டுறவு மையம், திருப்பத்தூர் என்கின்ற நிறுவனத்தில் வாங்கி வழங்கிட அனுமதியும் அதற்க்கான உத்தேச செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலகக் குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியத்தினை கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம்–1920, பிரிவு–15ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.1030/2020/எச்1**
**தீர்மான எண் . 55. அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.4.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரம் துப்புரவு அலுவலர் , துப்புரவு ஆய்வாளர் மற்றும் பிரிவு உதவியாளர் பிறப்பு & இறப்பு பதிவு செய்து சான்று வழங்கும் பிரிவு மற்றும் திடக்கழிவு மேலாண்மை , தூய்மை இந்தியா இயக்க பணிகள் யாவும் துப்புரவு அலுவலர் தலைமையிலான பிரிவில் நடை பெற்று வருகிறது . இப் பிரிவினை தவிர மற்ற அனைத்து துறை பிரிவு அறைகளிலும் குளிர் சாதன வசதி (A/C) வசதி செய்யப்பட்டுள்ளது . இப்பிரிவில் மட்டும் குளிர் சாதன வசதி செய்யப்படவில்லை . வரும் காலம் மிகவும் வெப்பம் அதிகமாக இருக்கும் என்பதினால் பணி செய்வது கடினமமக இருக்கும் . எனவே துப்புரவு அலுவலர் அறையில் அரசு நிர்ணயம் செய்த விலை விகிதத்தில் (DGS & D Rate) 1.5 டன் குளிர் சாதன எந்திரம் பொருத்த நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு ;- 1. மன்றம் அனுமதிக்கலாம் .
2 .ஆணையர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று அரசு அங்கீகாரம் பெற்ற டீலரிடம் விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண். 1074 /2021/இ1)**
**தீர்மான எண் . 56. அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.5.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான ஆலை ரோடு சமுதாய கூடம் மற்றும் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர மன்ற கூடத்தில் உள்ள மின் பழுதுகளை சீர் செய்து மீண்டும் மின் சப்ளை பெறும் பணிக்கு ( சட்ட மன்ற தேர்தல் 2021 பணிக்காக பாதுகாப்புக்காக மிலிட்டரி காவலர்கள் தங்குவதற்கு ) பொது நிதியில் நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் ரூ.39500/– திருமதி. S . பரிமளா அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு ;- மன்றம் பதிவு செய்யலாம் .

**(ந.க.எண். 0910/2021/இ1)**
**தீர்மான எண் . 57. அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.6.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி மேற்கு பள்ளியில் செடி கொடி மற்றும் கட்டிட கழிவு மற்றும் மணல் மேடுகளை மண் அள்ளும் இயந்திரம் மற்றும் டிராக்டர் மூலம் சுத்தம் செய்து சமன் செய்த பணிக்கு ( சட்ட மன்ற தேர்தல் 2021 பணிக்காக ) கல்வி நிதியில் நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் ரூ.44450/– திருமதி. S . பரிமளா அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு ;- மன்றம் பதிவு செய்யலாம் .

**(ந.க.எண். 0910/2021/இ1)**
**தீர்மான எண் . 58. அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.7.** நெல்லிக்குப்பம் நகராட்சி துப்புரவு அலுவலர் அறையில் அரசு நிர்ணயம் செய்த விலை விகிதத்தில் (DGS & D Rate) 1.5 டன் குளிர் சாதன எந்திரம் (Including all accessories) பொருத்தும் பணிக்கு 26.03.2021 அன்று விலைப்புள்ளி வரப்பட்டதின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர்/ முகவரி | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | Win Enterprises ,<br>46 A Vellimottan street ,<br>Cuddalore | 56450/– |
| 2 | Ravi Radios & cooker Home ,<br>54 , Subbaraya chetty street<br>Thiruppapuliyur<br>Cuddalore | 59400/– |
| 3 | S.Bhuvaneswari ,<br>3,Dr.R.Ambedcar Bus stand complex<br>Nellikuppam. | 60400/– |

**அலுவலகக்குறிப்பு:** . 1.வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள Win Enterprises ,46 A ,Vellimottan street , Cuddalore அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

2. தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு மற்றும் தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம் .

**தீர்மான எண் . 59. அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.8.** நெல்லிக்குப்பபம் நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் மற்றும் கொரோனா தொற்று நோய்களை வராமல் தடுத்திடும் பொருட்டு, துணை இயக்குநர்(சுகாதாரப் பணிகள்) கடலூர் அவர்களிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதம் ந.க.எண்.6873/2019/ஆ4, நாள்.15.03.2021ல் கொசு பெருக்கம், கொசு புழுக்கள் உருவாகும் கொள்கலன்களை அழித்திடும் பணிக்கு DBC பணியாளர்களை நியமிக்கப்பட்டு பணி மேற்கொண்டு வரும் நிலையில், மேலும் மூன்று மாதங்களுக்கு (ஏப்ரல் /2021 முதல் ஜீன்/2021 முடிய) பணி மேற்கொள்ள தொடர் நீட்டிப்பு வழங்கிட ஆணை பிறப்பித்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகராட்சியில் கடந்த ஆண்டில் டெங்குக் காய்ச்சலினால் எவரும் பாதிப்பிற்கு உள்ளாகாத காரணத்திற்க்காக அவசர பணிக்கு மட்டும் 16 DBC பணியாளர்களை ஜனவரி/2021 முதல் மார்ச்/2021 முடிய நியமிக்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்சமயம் பிப்ரவரி /2021 மாதத்தில் வார்டு 3 முள்ளிகிராம்பட்டு பகுதியில் மட்டும் மூன்று நபர்கள் டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு அரசு தலைமை மருத்துவமனை சிகிச்சை பெற்றதாக அறிக்கை வரப்பெற்றுள்ளதால், இனி வரும் காலங்களில் இதுபோன்று எவரும் காய்ச்சலினால் பாதிக்கப்படக்கூடாது என்பதினை கருதியும், கொரோனா தொற்று 2ம் அலை நகர் பகுதியில் தடுத்திடும் பொருட்டு, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், தற்சமயம் பணிபுரிந்து வரும் 16 DBC பணியாளர்களுடன் கூடுதலாக 14பணியாளர்கள் ஆக மொத்தம் 30 DBC பணியாளர்கள் ஏப்ரல் /2021 முதல் ஜீன் /2021 முடிய மூன்று மாதங்கள் மகளிர் சுய உதவிக்குழு மூலம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.200/– வீதம் வழங்கிடவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.5.50 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. டெங்கு காய்ச்சல் மற்றும் கொரோனா தொற்று சம்மந்தமாக நடவடிக்கை மேற்கொள்ள உள்ளதினால் ஆகும் செலவினத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.2015/2017/எச்1**

**தீர்மான எண் . 60. அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.9.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்கள் தினசரி காலை , மாலை இரண்டு வேலைகள் ஆழ்குழாய் கிணறுகள் மூலம் மேல் நிலை நீர்த் தேக்க தொட்டியில் தண்ணிர் நிரப்பபட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது . தற்சமயம் நகரில் முக்கிய பகுதிகளில் உள்ள ஆழ்குழாய் கிணறுகளில் மோட்டார் பம்புகள் அமைத்து பல வருடங்கள் ஆவதால் அடிக்கடி பழுது ஏற்பட்டு மோட்டார் பம்புகள் பராமரிப்பு பணிகள் பார்ப்பதன் செலவு அதிகமாக வருகிறது . மேலும் இதன் காரணமாக குடிநீர் சப்ளை மிகவும் பாதிப்பு அடைகிறது . எனவே வரும் 2021 சட்ட மன்ற தேர்தலை முன்னிட்டும் , கடும் கோடை காலமாக இருப்பதால் பழைய மின் மோட்டார் பம்புகள் மின்சார ஏற்றத் தாழ்வினால் பழுது ஏற்படும் பொருட்டு புதிய மோட்டார் பம்புகள் பொருத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது . இதனை பொது மக்கள் குடிநீர் விநியோக அவசர அவசியம் கருதி மோட்டார் பம்புகள் , கேபிள்கள் மற்றும் ஸ்டாட்டர்கள் வாங்குவதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.350000/– ஐ குடிநீர் நிதியில் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு ;- 1. மன்றம் அனுமதிக்கலாம் .
2 .ஆணையர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண். 1117/2021/இ1)**

**தீர்மான எண் . 61. அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.10.</u>** மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் , கடலூர் அவர்களின் கடித ந.க.எண் . எம்1/28207/2020 நாள். 17.03.2021 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களின் கடித ந.க.எண் . 2543/2021/TP3 நாள். 01.04.2021 மற்றும் நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அவர்களின் செயல் முறை உத்திரவு ந.க.எண் . 2966/2020/F1 நாள். 19.03.2021 ன் படி சட்ட சபை தேர்தல் 2021 கடலூர் மாவட்டம் 154 பண்ருட்டி சட்டமன்ற தொகுதி நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 51 வாக்குச் சாவடிகளில் சாமியான பந்தல் , மாடல் மாதிரி வாக்கு சாவடி மற்றும் மின் விளக்கு வசதி , மினரல் வாட்டர் , பிளாஸ்டிக் வாளிகள் மற்றும் அத்திவாசிய பணிகள் அமைத்த பணிக்கு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் நகராட்சி வருவாய் நிதியில் அவசர அவசியம் கருதி ஒப்பந்ததாரர் திருமதி . எஸ்.புவனேஸ்வரி அவர்களுக்கு ரூ.236655/– ( இரண்டு இலட்சத்து முப்பத்தி ஆறாயிரத்து அறநூற்று ஐம்பத்தி ஐந்து மட்டும் ) வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அ.கு. மன்றம் பதிவு செய்யலாம் .

**(ந.க.எண். 2966/2021/இ1)**

**தீர்மான எண் . 62. அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.11.</u>** நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.1030/20/எச்1, நாள்.26.03,.2021ன் படி, நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொரோனா மற்றும் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் தூய்மை பணியாளர்களின் பாதுகாப்பு நலன் கருதி பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் திருப்பத்தூர் அக்ரோ என்ஜினியரிங் அண்ட் கூட்டுறவு மையம், திருப்பத்தூர் என்ற நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டு, பொது சுகாதார இருப்பு(2021–22) பதிவேடு பக்க எண்கள்.05,23,45,63 மற்றும் 75ல் பதிவு செய்யப்பட்டு பணியாளர்களுக்கும், பொது சுகாதார பிரிவு கோட்டங்களுக்கும் வழங்கப்பட்டது. எனவே அதற்கான பட்டியல் தொகை ரூ.3,74,060/– திருப்பத்தூர் அக்ரோ என்ஜினியரிங் அண்ட் கூட்டுறவு மையம், திருப்பத்தூர் என்ற நிறுவனத்திற்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு–15ன் கீழ் வழங்கப்பட்டதை மன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1030/2020/எச்1**

**தீர்மான எண் . 63. அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.12.</u>** ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.0919/2021/எச்1, நாள்.23.03.2021ன்படி, நகராட்சி பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொள்வதற்கு தேவையான தளவாட சாமான்கள் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு தேவையான காலணிகள் சப்ளை செய்திட அரசு சார்புள்ள நிறுவனமான தமிழ்நாடு சிட்கோ லிமிடெட், அம்பத்தூர், சென்னை–58 உத்திரவு வழங்கப்பட்டது. அனைத்து பொருட்களும் சப்ளை செய்துவிட்டு பட்டியல் தொகை ரூ.194357.30/– வரப்பெற்றுள்ளது. ஆனால், மன்றத் தீர்மான எண்.35, நாள்.25.02.2021ல் ரூ.1,50லட்சத்திற்கு மட்டுமே அனுமதி பெறப்பட்டுள்ளது. மீதம் உள்ள தொகை ரூ.44,357/– மேற்படி நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:
1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்க்கான செலவினத்தினை திடக்கழிவு மேலாண்மை நிதி (அ) பொது நிதியிலிருந்து செலவு செய்திட அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.0919/2021/எச்1**
**தீர்மான எண் . 64. அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.13.</u>** இந்நகராட்சி பொது சுகாதாரம் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் 30 வார்டுகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்சமயம் நகர் பகுதியில் கொரோனா தொற்று அதிக நபர்கள் பாதிப்பிற்கு உள்ளாகி வருவதினால், பாதிப்பிற்கு உள்ளாகி உள்ள பகுதியிலும் பொதுமக்கள் வந்து செல்லக்கூடிய இடங்களிலும் தினமும் லைசால் அடிக்கப்பட வேண்டி உள்ளதினால், தற்சமயம் நகராட்சியில் 600 லிட்டர் மட்டுமே இருப்பு உள்ளதினாலும், முககவசம்(ஒரு முறை பயன்படுத்தக்கூடியவை) நகராட்சியில் 4000 எண்ணிக்கைகள் மட்டுமே உள்ளதினாலும்,

1. லைசால் – 3000 லிட்டர்
2. முக கவசம்(ஒருமுறை பயன்படுத்துதல்) – 5,000 எண்ணிக்கைகள்

மேலும், கூடுதல் தலைமைச் செயலாளர் சென்னை–9 அவர்களின் கடிதம் எண்.74/JS(MA) நிதி (ஊதியம்) /2020 நாள்.01.04.2020 கொரோனா தடுப்பிற்கு தேவையான கிருமிநாசினிகள், தற்காப்பு உபகரணங்களை விலைப்புள்ளி / ஒப்பந்தப்புள்ளி பெற்று வாங்கிட அவசியம் இல்லை எனவும் அவசர அவசியம் கருதி நேரடியாக வாங்கி உபயோகிக்கலாம் என தெரிவித்துள்ளமையால் கூட்டுறவு நிறுவனமான திருப்பத்தூர் அக்ரோ என்ஜினியரிங் அண்ட் கூட்டுறவு மையம், திருப்பத்தூர் என்கின்ற நிறுவனத்தில் வாங்கி வழங்கிட அனுமதியும் அதற்க்கான உத்தேச செலவினம் ரூ.6.00 லட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலகக் குறிப்பு:
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியத்தினை கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம்–1920, பிரிவு–15ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.1030/2020/எச்1**
**தீர்மான எண் .65. அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.14.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட குடிதாங்கி கிராமம், வார்டு– A, பிளாக்–15, T.S.No.4/3, இடத்தின் பரப்பு 42253.20 சதுரடியாகும். இவ்விடம் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவாக அமைந்ததால் மனைப்பிரிவின் உரிமையாளர் திருமதி.விஜயலட்சுமி என்பவர் விண்ணப்பம் செய்ததின் பேரில் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,கடலூர் அவர்கள் கொ.ஒ.ம.வ. / ந.ஊ.உ.இ (க.மா.) எண்R37/2020 என எண்ணிட்டு குடியிருப்பு மனைப் பிரிவினை கொள்கையளவில் ஒப்புதல் செய்து இந்நகராட்சிக்கு **16.02.2021**ல் வரப்பெற்றுள்ளது. **விஜயலட்சுமி நகர்** மனைப்பிரிவில் உள்ள சாலை மற்றும் பூங்காவினை நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் **16.11.2020**ல் தானபத்திரம் மூலம் பெறப்பட்டு (Document No. 2506/2020) அதன் நகல் மனுதாரரால் நகராட்சிக்கு வரப்பெற்றுள்ளது. எனவே, வரன்முறை செய்த மனைப்பிரிவு வரைபடத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும், அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

__அலுவலகக் குறிப்பு:-__

குடிதாங்கி கிராமம், வார்டு– A, பிளாக்–15, T.S.No.4/3, இடத்தின் பரப்பு **42253.20** சதுரடி குடியிருப்பு மனைப்பிரிவாக கொள்கையளவில் கொ.ஒ.ம.வ. / ந.ஊ.உ.இ (க.மா.) எண்R37/2020 என எண்ணிட்டு வரப்பெற்றுள்ளது. இதிலுள்ள சாலை மற்றும் பூங்காவினை உதவி இயக்குநர் கடலூர் அவர்களால் **16.11.2020**ல் தானம் பெறப்பட்டுள்ளது. மனுதாரர் முழுமையாக (அ) பகுதியாக கட்டணங்கள் செலுத்த உதவி இயக்குநர் தெரிவித்துள்ளதால், தொகையினை முழுமையாக பெற்றுக் கொண்டு மனைப்பிரிவினை வரன்முறை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**ந.க.எண்:- 568/2021/F1**

**தீர்மான எண் . 66. அனுமதிக்கப்பட்டது .**

**__மன்றபொருள்.15.__** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட சோழவல்லி கிராமம், வார்டு– பி, பிளாக்–15, T.S.No.205 part, இடத்தின் பரப்பு **38332.80** சதுரடியாகும். இவ்விடம் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவாக அமைந்ததால் மனைப்பிரிவின் உரிமையாளர் திருமதி.வசந்தா என்பவர் விண்ணப்பம் செய்ததின் பேரில் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கடலூர் அவர்கள் கொ.ஒ.ம.வ. / ந.ஊ.உ.இ (க.மா.) எண்R19/2021 என எண்ணிட்டு குடியிருப்பு மனைப் பிரிவினை கொள்கையளவில் ஒப்புதல் செய்து இந்நகராட்சிக்கு **23.03.2021**ல் வரப்பெற்றுள்ளது. **வசந்தம் நகர்** மனைப்பிரிவில் உள்ள சாலை மற்றும் பூங்காவினை நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் **05.11.2020**ல் தானபத்திரம் மூலம் பெறப்பட்டு (Document No. 753/2021) அதன் நகல் மனுதாரரால் நகராட்சிக்கு வரப்பெற்றுள்ளது. எனவே, வரன்முறை செய்த மனைப்பிரிவு வரைபடத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும், அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

__அலுவலகக் குறிப்பு:-__

சோழவல்லி கிராமம், வார்டு– பி, பிளாக்–15, T.S.No.205 part, இடத்தின் பரப்பு **38332.80** சதுரடி குடியிருப்பு மனைப்பிரிவாக கொள்கையளவில் கொ.ஒ.ம.வ. / ந.ஊ.உ.இ (க.மா.) எண்R19/2021 என எண்ணிட்டு வரப்பெற்றுள்ளது. இதிலுள்ள சாலை மற்றும் பூங்காவினை உதவி இயக்குநர் கடலூர் அவர்களால் **05.11.2020**ல் தானம் பெறப்பட்டுள்ளது. மனுதாரர் முழுமையாக (அ) பகுதியாக கட்டணங்கள் செலுத்த உதவி இயக்குநர் தெரிவித்துள்ளதால், தொகையினை முழுமையாக பெற்றுக் கொண்டு மனைப்பிரிவினை வரன்முறை செய்யலாம்.

**ந.க.எண்:- 1053/2021/F1**

**தீர்மான எண் . 67. அனுமதிக்கப்பட்டது .**

**__மன்றபொருள்.16.__** இந்நகராட்சி பகுதியில் தற்சமயம் கொரோனா தொற்று அதிக அளவில் பாதிப்பிற்கு உள்ளாகி வருகின்ற காரணத்தினால் தொற்று கண்ட நபர்களின் வீடுகளிலும், அதனை சுற்றியுள்ள குடியிருப்புகளிலும், பொதுமக்கள் அதிகம் வந்து செல்லக்கூடிய பகுதிகளிலும் பிளீச்சிங் பவுடர் கலந்த நீர்த்த சுண்ணாம்பு தினந்தோறும் தெளிக்கப்பட்டு வருவதினால், பிளீச்சிங் பவுடர், நீர்த்த சுண்ணாம்பு அதிக அளவில் பயன்படுத்தப்படுவதினால் தற்சமயம்

1. பிளீச்சிங் பவுடர் – 750 கிலோ கிராம்
2. நீர்த்த சுண்ணாம்பு – 1,000 கிலோ கிராம் மட்டுமே

இன்றைய(**18.05.2021**) தேதியில் இருப்பு உள்ளது.தற்சமயம் தொற்று கண்டவர்கள் சுமார் **30** பகுதிகளுக்கு மேலான இடங்களிலிருந்து சிகிக்சைக்காக மருத்துவமனை சென்றுள்ளனர்.

மேலும், முக்கிய பிரமுகர்கள், நல சங்க நிர்வாகிகள் மற்றும் வர்த்தக சங்க நிர்வாகிகள் போன்றோர் முக்கிய இடங்களில் பொதுமக்கள் வந்து செல்லக்கூடிய பொது இடங்களில் கிருமிநாசினிகள் தெளித்திடுமாறு அறிவுறுத்தி வருகின்றனர் இதன் காரணமாக தினமும் பிளீச்சிங் பவுடர் மற்றும் நீர்த்த சுண்ணாம்பு தேவை அதிகமாக உள்ளது. எனவே இருப்பு குறைவாக உள்ளதினால்,

1. பிளீச்சிங் பவுடர் – 5000 கிலோகிராம்
2. நீர்த்த சுண்ணாம்பு – 15,000 கிலோகிராம்

கூட்டுறவு நிறுவனமான SL(SPL) 170,திருச்செங்கோடுஅக்ரோ என்ஜினியரிங் சர்வீஸ் கூட்டுறவு மையம் லிமிட், 87, வேலூர் மெயின் ரோடு, திருச்செங்கோடு – **637211.** நாமக்கல் மாவட்டம். என்ற நிறுவனத்திடமிருந்து வாங்கி உபயோகிக்க அனுமதி வழங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.**5.25** லட்சத்திற்கும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் **1920** பிரிவு **15**ன் கீழ் வழங்க அனுமதியும் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: **1.** மன்றம் அனுமதிக்கலாம்.

**2.** பொது சுகாதார அவசர அவசியத்தினை கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம்–**1920**, பிரிவு–**15**ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.1030/2020/எச்1

**தீர்மான எண் . 68. அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.17.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சி அலுவலக வளாகத்தை சுற்றியுள்ள சுற்று சுவர் உயரம் மிக குறைவாக உள்ளது . இதன் காரணமாக நகராட்சி அலுவலகத்தை சுற்றியுள்ள காலனி பகுதியில் உள்ளவர்கள் சுவர் ஏறி குதித்து உள்ளே வந்து மலம் கழித்து சென்று வருகின்றனர் **.** மேலும் நகராட்சியில் உள்ள பொருட்கள் அடிக்கடி காணமல் போய் விடுகிறது . நகராட்சியில் உள்ள கணினிகள் மற்றும் அலுவலகத்தில் உள்ள வாகனங்களுக்கும் போதிய பாதுகாப்பு இல்லாமல் உள்ளது . எனவே மேற்படி உயரம் குறைவாக உள்ள சுற்று சுவரை உயர்த்தி தடுப்பு கம்பி வேலி அமைக்க கோரி ஆணையர் அவர்கள் ஆய்வின் போது தெரிவித்துள்ளார்கள் . எனவே அலுவலக பொருட்கள் மற்றும் வாகனங்கள் பாதுகாப்பு கருதியும் , சுகாதார கேடுகள் ஏற்படாமல் தடுக்கும் வகையில் அலுவலகம் சுற்றியுள்ள சுற்று சுவரை உயர்த்தி தடுப்பு கம்பி வேலி அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.**750000/–** ஐ பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு ;- மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண். 1117/2021/இ1)**

**தீர்மான எண் . 69. அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.18.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி அலுவலகத்தில் அனைத்து பிரிவுகளிலும் தினசரி அலுவலக நடவடிக்கைகள் , பொறியியல் பிரிவு பணிகள் , பொது சுகாதார பிரிவு பணிகள் பற்றிய விவரங்களை ஜெராக்ஸ் எடுக்கவும் , மேலும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் , நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் , நகராட்சி மண்டல இயக்குநர் அவர்கள் மற்றும் பிற துறை உயர் அதிகாரிகளின் ஆய்வு கூட்டத்திற்கு செல்லும் போது அவர்கள் கோரும் விவரங்களை உரிய புத்தக வடிவத்தில் தயார் செய்ய தேவையான நகல்கள் அடிக்கடி ஜெராக்ஸ் எடுக்கப்படுகிறது . மேலும் மன்ற கூட்ட பொருள்களும் ஜெராக்ஸ் எடுக்கப்படுகிறது . பொறியியல் பிரிவில் பணிகள் சம்மந்தமாக மாதம் இரு முறை ஆய்வுக் கூட்டத்திற்கான பணி விவரங்கள் புத்தக வடிவில் எடுக்கப்பட்டும் வருகிறது . பழைய ஜெராக்ஸ் மிஷின் அடிக்கடி பழுதடைவதால் அலுவலக பணிகள் அவசர அவசியம் கருதியும் , தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி அரசு நிர்ணயம் செய்த விலையில் , அரசு நிர்ணயம் செய்த அங்கீகரிக்கப்பட்ட முகவரிடம் புதிய நவீன ஜெராக்ஸ் மிஷின் **Canon Image Runner 2625 Copier Cum Copier with printer,** DGS&D விலை விகிதத்தில் வாங்கப்பட்டது . மேற்படி ஜெராக்ஸ் மிஷினுடைய Toner காலியாகிவிட்டால் உடனடியாக மாற்று Toner மாற்ற தேவைப்படுவதால் அங்கீகரிக்கப்பட்ட முகவர் M/s . Excite Inc , புதுச்சேரி நிறுவனம் அவர்களிடம் தொலை பேசியில் விலைபுள்ளி கோரியதற்கு Excite நிறுவனம் மே **18**ல் விலைப்புள்ளி அனுப்பியுள்ளது . இதனால் புதிய ஜெராக்ஸ் மிஷினுக்கு **3** எண்ணிக்கை Canon NPG 84 Toner வாங்க செலவினம் ரூ.**25050/–**ஆகும் . இதற்கு ஆகும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு ;- மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண். 0951/2019/இ1)**

**தீர்மான எண் . 70. அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.19.</u>** இந்நகராட்சியின் **2020–2021**ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

**தீர்மான எண் . 71. அனுமதிக்கப்பட்டது .**

தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி